1981 மார்ச் 27]

[முற்பகல் 10-20]

திரு. வ சத்திய மூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுநாயக்கன், தோட்டி போன்றவர்களைப் போல், சலவைத் தொழிலாளர்களையும், சவரத் தொழிலாளர்களையும் ஆதி திராவிடர் இனத்தோடு சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கை. (மணி அடிக்கப்பட்டது.)

சென்னை அரசு அச்சகத்திலுள்ள இயந்திரங்கள்

*வினா எண். 524—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையில் உள்ள அரசு அச்சகத்தில் இயந்திரங்கள் பல பழுதுபட்டோ அல்லது வேலைக்குப் பயன்படுத்தப்படாமலோ இருந்து வருவது உண்மையா ?

(ஆ) ஆம், எனில் அதற்கான காரணங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) இயந்திரங்களை உபயோகத்தில் கொண்டு வருவதற்கான காலதாமதத்திற்கு அடிப்படைக் காரணம் அவை அயல் நாடுகளில் செய்யப்பட்டதால், அவைகளின் உதிரி உறுப்புக்கள் (Sp re p.rts) இங்கு கிடைப்பது இல்லை.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை இயந்திரங்கள் பழுதுபட்டிருக்கின்றன ? வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட எத்தனை இயந்திரங்கள் பயன்படுத்தப் படாமல் இருக்கின்றன ? அவற்றின் மதிப்பு எவ்வளவு என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்தில் உள்ள குறிப்பின்படி 14 இயந்திரங்கள் பழுதடைந்த நிலையிலே இருக்கின்றன. அவைகளின் மதிப்பு கொடுக்கப்படவில்லை.

திரு து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை ஆண்டுகளாக அந்த இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 14 இயந்திரங்களில் ஏறத்தாழ 11 இயந்திரங்கள் பெரும் பழுதடைந்தவையாக இருக்கின்றன. 1972-க்குப் பின் தான் இந்த நிலை இருந்து வருகின்றது.

திரு. வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட மன்ற உறுப்பினருக்கு அளிக்கும் பட்ஜெட் ஸ்பீச், கவர்னர் அட்ரஸ் போன்றவைகள் அச்சடிப்பதற்காக இங்கிருந்து கவர்ன்மென்ட் பிரஸிற்கு போகவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அவைகளை இங்கேயே அச்சடிக்கும் வகையில் தலைமைச் செயலகத்திலேயே ஒரு மினி பிரஸ் துவங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது.)

கட்டயன் தேவன் பட்டியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக கட்டப்பட்ட வீடுகள்.

*வினா எண். 525—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருவில்லிபுத்தூர் தொகுதி கட்டயதேவன்பட்டி கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான அரிசன நலத்துறையில் இருந்து கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளில் மக்கள் குடியேறாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : திருவில்லிபுத்தூர் தொகுதி கட்டயத்தேவன்பட்டி கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகக் கட்டப்பட்ட இருபத்து மூன்று வீடுகளில் இருபது வீடுகளில் மக்கள் குடியேறியுள்ளனர். மீதமுள்ள மூன்று வீடுகள் பழுதடைந்துள்ளதால் அவற்றில் மக்கள் குடியேறவில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1973 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு மத்திய சர்க்காரிலிருந்து ஜெயந்தி ஸ்கீம் என்று ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்த அடிப்படையில், கட்டய தேவன்பட்டியில் மட்டுமல்லாமல் தமிழகம் முழுவதும் வீடுகள் கட்டிக் கொடுத்தார்கள். அந்த வீடுகள் பூராவும் இடிந்து விட்டன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 23 வீடுகளில் 3 வீடுகள்தான் இடிந்திருக்கின்றன என்று சொன்னார்கள். மீதமிருக்கும் 20 வீடுகளும் இடியும் தருவாயில் இருக்கிறது என்ற காரணத்தால், தமிழக அரசு புதிய வீடுகள் கட்டுவதற்கும், அல்லது ரிப்பேர் செய்வதற்கும் ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவில்லிபுத்தூர் தொகுதியில் கட்டய தேவன்பட்டி கிராமத்தைப் பொறுத்த வரையில் இந்த வீடுகள் ஜெயந்தி கிராமத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டவை ஆகும். வீடுகள் கட்டத் துவங்குவதற்கு முன்பு, கருமண்ணாக இருக்கும்